[17th March 1955

National Extension Service Scheme in Tiruvallur taluk.

* 1427 *Q.*—Sri V. GOVINDASWAMI NAIDU (on behalf of Sri M. Dharmalingam): Will the Hon. the Minister for Agriculture be pleased to state—

(*a*) the number of works taken up for execution under National Extension Schemes in Tiruvallur taluk during the year 1953–54; and

(*b*) the number of works left over for want of contribution?

The Hon. Sri M. BHAKTAVATSALAM :—" (*a*) Fifty.

" (*b*) Two."

Sri V. R. NAGARAJAN :—" Have the Government any proposals for implementing protected water-supply . . . ?"

Mr. SPEAKER :—" We are in question No. 1427."

Sri K. VINAYAKAM :—" For the fifty works that have been taken up under the National Extension Service, did the villagers contribute the 50 per cent that was prescribed by the Government?"

The Hon. Sri M. BHAKTAVATSALAM :—" The villagers did contribute, but the 50 per cent is not invariably insisted upon."

Public holiday on the birth-day of Sri Narayana Guru Dev.

* 1428 *Q.*—Sri P. K. GOPALAKRISHNAN : Will the Hon. the Minister for Finance be pleased to state whether the Government have any proposal to declare the birth-day of Sri Narayana Guru Dev as a public holiday throughout the State?

The Hon. Sri C. SUBRAMANIAM :—" No, Sir."

(The hon. Member Sri Gopalakrishnan stood up in his seat to put a supplementary question.)

Mr. SPEAKER :—" There is one non-official Resolution before the House and I have given enough time for it. I do not think there is necessity for putting supplementaries on this question now. I think the matter will be taken up at the next non-official day."

Labour dispute in Mettur Industries.

* 1429 *Q.*—Sri M. KALYANASUNDARAM : Will the Hon. the Minister for Agriculture be pleased to state—

(*a*) whether the Government have received the report of the Conciliation Officer regarding the dispute over the bonus for the year 1953–54 between the Mettur Industries and their workers;

(*b*) the further steps taken by the Government to settle the dispute; and

(*c*) whether the Government consulted the Union of workers regarding the settlement of the dispute?

17th March 1955]

THE HON. SRI M. BHAKTAVATSALAM :—" (a) Yes, Sir.

" (b) The Minister held joint discussion with the representatives of the management and the workers. And finally the Government have referred the dispute for adjudication.

" (c) Yes, Sir."

SRI M. KALYANASUNDRAM :—" முடிவாக அதில் நன்மை ஏற்பட்டிருக்கிறது என்பதை ஒப்புக்கொள்ளுகிறேன். முதலில் தொழிலாளர்களுடைய பிரதிநிதிகளைக் கூப்பிட்டுப் பேசக் கூடிய சமயத்தில் மந்திரி அவர்கள் தொழிலாளர்களுடைய சங்கத்தைக் கூப்பிடுவதற்கு பதிலாக 20, 30 கிளார்க்குகள் இருக்கும் சங்கத்தை மட்டும் கூப்பிட்டு பேசினார். 2,000 தொழிலாளர்கள் அங்கத்தினராகவுள்ள சங்கத்தைக் கூப்பிட்டு பேச்சு வார்த்தை நடத்த முயற்சிக்கவில்லை. தற்செயலாய் நான் அங்கு இருந்ததால் இதை அறிந்து உடனே மந்திரிக்கு தெரியப்படுத்தி மற்ற சங்கங்களின் பிரதிநிதிகளையும் அழைத்து சமரசம் செய்யவேண்டும் என்று சொன்னேன். அதன் மேல் மற்றவர்களையும் அழைத்து வந்து பேச்சு வார்த்தை நடத்தப்பட்டது. அதற்கு என் நன்றியை தெரிவித்துக்கொள்ளுகிறேன். மேலும் அத்தொழில் சங்கங்கள் ஐந்து மாத போனஸ் வேண்டுமென்று கேட்டபோது முதலாளிகள் 4¾ மாத போனஸ்தான் கொடுப்பதாகச் சொன்னார்கள். அப்படியிருந்தாலும் அதற்கு சம்மதிக்கலாம் என்று தொழிற் சங்கம் அபிப்பிராயம் தெரிவித்தும்கூட குமாஸ்தாக்கள் சங்கப் பிரதிநிதிகள் பேச்சைக்கேட்டுக்கொண்டு சர்க்கார் அவ்விஷயத்தை அட்ஜுடிகேஷனுக்கு விட்டிருப்பதன் நோக்கம் என்ன என்பதை அறிய விரும்புகிறேன்."

THE HON. SRI M. BHAKTAVATSALAM : —" இதற்கு முன்பே கனம் அங்கத்தினர் இதே மாதிரி கேட்டார். அதற்கு ஏற்கெனவே நான் பதில் சொல்லியிருக்கிறேன். தொழில் சங்கங்களில் நான் நடந்து கொள்ளும் முறை பாரபட்சமாக இருக்கின்றன என்று சொல்லுவது முற்றிலும் தவறு. ஒரு சங்கத்தைமட்டும் தான் கூப்பிட்டு பேசினேன், மற்ற சங்கங்களை கூப்பிடவில்லை என்று சொல்லுவது தவறு. நான் அம்மாதிரி பாரபட்சம் காட்டுவது இல்லை. இந்த குறிப்பிட்ட விஷயத்தில் நான் எல்லாதொழிற்சங்க பிரதிநிதிகளையும் அழைத்தேன். அந்த வெள்ளைக்கார கம்பெனியின் பிரதிநிதிகளும் வந்தார்கள். அவர்களிடையே சமரசம் செய்து வைக்க நான் முயன்றேன். தொழிற் சங்கங்கள் ஐந்து மாத போனஸ் கொடுக்கப்பட வேண்டும் என்று வற்புறுத்தினார்கள். ஆனால் வெள்ளைக்கார முதலாளிகள் 4¾ மாத போனஸ்தான் கொடுப்போம் என்று சொன்னார்கள். கால்மாத போனஸ்தானே அதிகமாக கேட்கிறார்கள் இதில் தகராறு வேண்டாம், கொடுத்து விடுங்கள் என்று வெள்ளைக்கார முதலாளிகளுக்கு நான் ஆலோசனை கூறினேன். அதற்கு அவர்கள் சம்மதிக்காமல் பிடிவாதமாக இருந்தார்கள். பிறகு நான் ஒரு மாத அட்வான்ஸ் ஆவது கொடுங்கள், பண்டிகை வருகிறது. என்று சொன்னேன். அதற்கும் அவர்கள் யோசித்துச் சொல்லுகிறோம் என்று போய் விட்டார்கள். நான் சொல்லிய இரண்டு யோசனைகளையுமே ஒப்புக்கொள்ள முடியாதென அவர்களிடமிருந்து சர்க்காருக்கு கடிதம் வந்துவிட்டது. இரு சாராரும் பிடிவாதமாக இருந்த காரணத்தினால் தான் சர்க்கார் இவ்விஷயத்தை அட்ஜுடிகேஷனுக்கு விடுவது நல்லது என்று முடிவு செய்தார்கள். ஆகவே நான் யாருடைய பேச்சையும் கேட்டுக்கொண்டு இவ்விஷயத்தை அட்ஜுடிகேஷனுக்கு விட்டுவிட்டதாகவும் தொழிற்சங்கங்களுக்கிடையே பாரபட்சம் காட்டுவதாகவும் எதிர் கட்சி உப தலைவர் சொல்வது சரியல்ல. அது தவறான கருத்து என்றும் சொல்ல விரும்புகிறேன்."

SRI M. KALYANASUNDRAM :—" கனம் மந்திரி அவர்கள் கூறியவற்றிலுள்ள பல விஷயங்களை நான் மறுக்க வேண்டியிருக்கிறது. கனம் மந்திரி அவர்களே, அந்த முதலாளிகள் ஐந்து மாதப் போனஸ்

[17th March 1955

கொடுக்கலாமென்று சொன்னார்கள். அதோடு தொழிற் சங்கங்கள் கேட்பது போல அவர்கள் ஐந்து மாதப் போனஸ் கொடுக்கலாம், இருந்தாலும் நாலேமுக்கால் மாதங்களுக்குத்தான் போனஸ் கொடுப்போம் என்று அவர்கள் சொல்லுகிறார்கள், என்ன செய்யலாம், என்று அனுதாபத்தோடு கேட்டார்கள். அதற்கு நான் 'நாலேமுக்கால் மாதங்களுக்குக் கொடுத்தாலும் பரவாயில்லை, நாம் அவர்களோடு சமரசமாகப் போய்விடலாம், இதை அட்ஜூடிகேஷனுக்கு விடுவதாக இருந்தால் நிச்சயமாக காலதாமதம் ஆகும், ஒரு வருஷம், இரண்டு வருஷங்கள் ஆனாலும் ஆகும், தொழிலாளர்களுடைய நலனை உத்தேசித்து இதை அவர்கள் உடனடியாகக் கொடுக்கத் தயாராக இருந்தால் நாம் ஒப்புக்கொண்டு விடலாம்,' என்று சொல்லியிருக்கிறேன். அதோடு அங்கு இருக்கக் கூடிய தொழிற்சங்கம் கம்யூனிஸ்டுகளுடைய தொழிற்சங்கம் அல்ல. அந்தத் தொழிற்சங்கத்தில், காங்கிரஸ் கட்சிக்காரர்கள், பிரஜா சோஷலிஸ்டுக்காரர்கள், கம்யூனிஸ்டுக்காரர்கள் ஆகிய எல்லாக் கட்சிகளையும் சேர்ந்த தொழிலாளர்கள் சுமார் 1,800 பேருக்கு மேல் அங்கத்தினர்களாக இருக்கிறார்கள். ஆகவே அந்தத் தொழிற்சங்கத்தை கம்யூனிஸ்ட் கட்சியினருடைய சங்கம் என்று சொல்வது ரொம்பவும் தப்பாகும்."

THE HON. SRI M. BHAKTAVATSALAM :—"நான் தொழிலாளர்களுடைய பிரதிநிதிகளையும், மானேஜ்மெண்டாரையும் கூப்பிட்டுவைத்துக் கொண்டு பேசியபோது கனம் எதிர்க்கட்சி உபதலைவர் இல்லையென்று நினைக்கிறேன். தொழிற்சங்கத்தைச் சேர்ந்தவர்கள் ஐந்து மாதம் போனஸ் கொடுக்கவேண்டுமென்று வற்புறுத்தினார்கள். ஆனால் அந்த வெள்ளைக்கார முதலாளிகள் நாலேமுக்கால் மாதத்திற்கு மேல் போனஸ் கொடுக்கமாட்டோம் என்று சொல்லிவிட்டார்கள்."

SRI K. VINAYAKAM :—" Sir, I rise to a point of order. This is the time allotted for answering of questions. May I know what has been going on in the House? "

MR. SPEAKER :—" The hon. Member has been listening to what is going on in the House."

SRI K. VINAYAKAM :—" Sir, I want a ruling from you on this matter, Sir."

MR. SPEAKER :—" The only thing is the answer is lengthy. Hereafter, if the answers are lengthy, let the fact be communicated to me. I shall mark such questions as unstarred ones. That will be the best thing to do."

THE HON. SRI M. BHAKTAVATSALAM :—" Sir, this answer is not at all lengthy. All these supplementary questions arise out of the main question. I submit I may have to reply to the points raised by the hon. Member which are very pertient to the question put.

நான் இருசாரரையும் அழைத்துப் பேசியபோது தொழிற்சங்கப் பிரதிநிதிகள் நாலேமுக்கால் மாத போனஸ் கொடுப்பதை ஒப்புக்கொள்வதாக என்னிடம் சொல்லவேயில்லை. நான் முதலாளிகளிடம் கால் மாதத்திற்காகத் தகராறு வேண்டாம் என்றும் சொன்னேன். யோசித்துச் சொல்லுகிறோம் என்று என்னிடம் சொல்லிவிட்டுப் போனவர்கள் நிர்தாட்சன்யமாக அதை ஒப்புக்கொள்ளமுடியாது என்று கடிதம் எழுதிவிட்டார்கள். ஆகவேதான் நான் அட்ஜூடிகேஷனுக்கு அவ்விஷயத்தை refer பண்ணினேன். ஸ்ரீ கல்யாணசுந்தரம் அவர்கள் இந்தச் சபையின் எதிர்க்கட்சி உபதலைவராக இருக்கலாம். ஆனால் அவர் என்னிடம் தனியாகச் சொன்ன விஷயத்தை, தொழிற்சங்கப் பிரதிநிதிகள் அதைப்பற்றிச் சொல்லாத போது நான் செய்வது என்பது முடியாத காரியம்."

17th March 1955]

SRI M. KALYANASUNDARAM :—"அந்தத் தொழிற்சங்கம் முதலாளிகள் சொல்கிறபடி நாலேமுக்கால் மாத போனஸுக்கு ஒப்புக் கொள்ளுகிறோம் என்று லேபர் கமிஷனருக்குக் கடிதம் எழுதியிருப்பது உண்மையா இல்லையா ?"

THE HON. SRI M. BHAKTAVATSALAM :—" அட்ஜுடிகேஷனுக்கு இந்த விஷயம் ரெபர் பண்ணப்பட்ட பிறகுதான் அந்தக் கடிதம் லேபர் கமிஷனருக்கு வந்தது."

Tirumalai-Tirupathi Devasthanam Estate at Tiruvallur.

* 1430 *Q.*—SRI M. DHARMALINGAM : Will the Hon. the Minister for Revenue be pleased to state—

(*a*) the amount allotted for improving the irrigation sources in Tirumalai-Tirupathi Devasthanam Estate at Tiruvallur now taken over by the Government for the year 1953–54;

(*b*) whether any amount was surrendered unspent; and

(*c*) if so, the reasons therefor?

THE HON. SRI M. A. MANICKAVELU :—" (*a*) The allotment sanctioned for 1953–54 was Rs. 1,01,073.

" (*b*) A sum of Rs. 1,401 was surrendered as being unspent.

" (*c*) After the Andhra became a separate State, the estate was taken over by the Collector of Chingleput on 1st October 1953 and then the rainy season had commenced. So, this small amount was left unspent."

SRI S. RAMALINGAM :—" திருவள்ளூரில் இருக்கக்கூடிய திருமலை திருப்பதி தேவஸ்தானத்திற்குச் சொந்தமான நிலங்கள் எஸ்டேட் அபாலிஷன் சட்டத்திற்கு உட்படுத்தப்பட்டிருக்கிறதா ? உட்படுத்தப்படாதிருந்தால் அதை அந்தச் சட்டத்திற்குட்படுத்த தக்க நடவடிக்கையை அரசாங்கம் எடுப்பார்களா ?"

THE HON. SRI M. A. MANICKAVELU :—" This is an estate that has been taken over by the Government."

MR. SPEAKER :—" We shall now take up question No. 1420. The answer is now ready."

Working of the Prohibition Act.

* 1420 *Q.*—SRI N. K. PALANISAMY : Will the Hon. the Minister for Religious Endowments and Transport be pleased to state with reference to question No. 104 answered on 7th December 1954, the contents of the report submitted to the Planning Commission with regard to the working of the Prohibition Act in this State?

THE HON. SRI B. PARAMESWARAN :—" A copy [a] of the report is placed on the table of the House."

SRI N. K. PALANISAMY :—" ஆந்திராவில் ராமமூர்த்தி கமிட்டியை ஏற்படுத்தி மதுவிலக்கு சட்டம் சம்பந்தமாகப் பரிசீலனை செய்து, பின்னர் அக்கமிட்டியின் ரிப்போர்ட்டு பேரில் மதுவிலக்குச் சட்டத்தை தளர்த்திருப்பது

[a] Printed as Appendix III on page 986 infra.